செய்தி வெளியீடு எண்: 322 நாள் : 04.07.2016

**செய்தி வெளியீடு**

**மாநில அளவிலான ஓவிய, சிற்ப கலைக்காட்சி நடத்துதல்**

கலை பண்பாட்டுத்துறை, தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு மூலம், மாநில அளவிலான மரபுவழி / நவீனபாணி பிரிவில் ஓவிய, சிற்ப கலைக்காட்சி நடத்தி விருதுகள் வழங்குதல், சிறந்த கலைஞர்களுக்கு கலைச்செம்மல் விருதுகள் வழங்குதல், அரசு கவின் கலைக் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் சிறந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை வழங்குதல், தனி நபர் கண்காட்சி / கூட்டு கண்காட்சி நடத்திட நிதியுதவி வழங்குதல் உள்ளிட்ட கலைப்பணிகளை மேற்கொண்டு வருகிறது.

அவ்வகையில், சென்னையில் மாநில அளவிலான ஓவிய, சிற்ப கண்காட்சி நடத்தி, சிறந்த ஓவியங்கள், சிற்பங்களின் அடிப்படையில், மரபுவழி பிரிவில் 30 வயதிற்கு மேற்பட்ட 10 மூத்தக் கலைஞர்களுக்கும், 30 வயதிற்குட்பட்ட 10 இளங்கலைஞர்களுக்கும், நவீனபாணிப் பிரிவில் 30 வயதிற்கு மேற்பட்ட 10 மூத்தக் கலைஞர்களுக்கும், 30 வயதிற்குட்பட்ட 10 இளங்கலைஞர்களுக்கும் என ஆக மொத்தம் 40 கலைஞர்கள் விருதிற்கு தெரிவு செய்யப்படுவர். தெரிவு செய்யப்படும் மூத்தக் கலைஞர்களுக்கு ரூ.9,000/—க்கான காசோலையும், இளங்கலைஞர்களுக்கு ரூ.3,500/—க்கான காசோலையும் வழங்கப்படும்.

மாநில அளவிலான கண்காட்சி நடத்திட, முதற்கட்டமாக தமிழகம் முழுவதுமுள்ள ஓவிய, சிற்ப கலைஞர்களிடமிருந்து ஓவியங்கள் மற்றும் சிற்பங்களின் புகைப்படங்கள் பின்வரும் விதிமுறைகளின்படி வரவேற்கப்படுகின்றன.

1. ஓவிய, சிற்ப கலைக்காட்சியில் கலந்துகொள்ள விரும்பும் கலைஞர்கள் தங்களின் புகைப்படத்துடன் (Passport size) கூடிய தன்விவரக்குறிப்புடன் (பெயர், பிறந்த தேதி, கலைப்பிரிவுகளில் பெற்றுள்ள கல்வித் தகுதிகள், படைப்பின் தலைப்பு, படைப்பின் பெயர், தொலைபேசி எண் ஆகிய விவரங்களுடன்), ஓவியங்கள் / சிற்பங்களின் ( 10''x12'' size) இரண்டு புகைப்படங்களை அனுப்பி வைத்திடுதல் வேண்டும்.

2. கலைஞர்கள் மரபுவழிப் பிரிவிலோ அல்லது நவீனபாணி பிரிவிலோ என ஏதேனும் ஒரு பிரிவில் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்.

3. ஓவியர்கள் மற்றும் சிற்பிகளிடமிருந்து பெறப்படும் புகைப்படங்களில் இருந்து, அரசால் நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக்குழுவின் மூலம் புகைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டு,

அவர்களுக்கு மட்டும் உரிய விவரங்கள் இவ்வலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டு, அதன் பின்னர் ஒவியப் படைப்புகளும், சிற்பங்களும் பெறப்பட்டு கண்காட்சியில் வைக்கப்படும்.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் உரிய தன்விவரக்குறிப்புடன் (Bio-Data) ஒவியங்களின் / சிற்பங்களின் புகைப்படங்களை பின்வரும் முகவரிக்கு 20.7.2016–க்குள் அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**ஆணையர்(பொ),**
**கலை பண்பாட்டுத்துறை,**
**தமிழ் வளர்ச்சி வளாகம், இரண்டாம் தளம்,**
**தமிழ்ச் சாலை, எழும்பூர்,சென்னை–600 008.**
**தொலைபேசி எண். 28193195, 28192152**

ஆணையர்(பொ)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**